*10 Nov 2010 12:17:41 PM IST*

# பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு போனஸ் வழங்காதது ஏமாற்றம்: என்.எப்.டி.இ. துணைப் பொதுச் செயலர்

திருச்சி, நவ. 9: பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு போனஸ் வழங்காதது ஏமாற்றம் அளிக்கிறது என்றார் தேசிய தொலைத்தொடர்பு ஊழியர்கள் சம்மேளன (என்.எப்.டி.இ.) துணைப் பொதுச் செயலர் சி.கே. மதிவாணன்.

திருச்சியில் செவ்வாய்க்கிழமை அவர் அளித்த பேட்டி:

"தொலைத்தொடர்புத் துறை ஊழியர்களுக்கு 1979 ஆம் ஆண்டு முதல் போனஸ் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், நிகழாண்டு போனஸ் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டம் காரணமாகக் கூறப்படுகிறது.

அஞ்சல் துறை 10 ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது என்றாலும், அங்கு போனஸ் வழங்கப்படுகிறது. பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் ரூ.32,000 கோடி வருவாய் ஈட்டப்பட்டும், போனஸ் வழங்கப்படவில்லை.

பி.எஸ்.என்.எல். நிர்வாகம் கூறும் லாப, நஷ்ட கணக்கே தவறாக உள்ளது. தேய்மானத்துக்கு மட்டுமே ரூ.9,000 கோடி கணக்குக் காட்டப்பட்டுள்ளது. லாப அடிப்படையில் மட்டுமே போனஸ் என்பது கூடாது என உச்ச நீதிமன்றமே தெரிவித்துள்ளது.

பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் செலவு அதிகமாகி விட்டதன் காரணமாகவே, லாபம் குறைந்து விட்டது.

போனஸ் வழங்காதது தொடர்பாக தர்னா போராட்டம் நடத்தவுள்ளதாகத் தெரிவித்த பின்னர், பி.எஸ்.என்.எல். நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது. ஆனால், தீபாவளி முடிந்தும் இன்னும் பேச்சுவார்த்தை தொடங்கப்படவில்லை. இதனிடையே, நஷ்டம் என்பதால், டிசம்பர் மாத ஊதியமே வங்கியில் கடன் வாங்கித்தான் வழங்க வேண்டிய நிலை உள்ளது என அச்சுறுத்தும் வகையில் உயர் அதிகாரிகள் பதில் அளிக்கின்றனர். ஆனால், கடன் வாங்கும் அளவுக்கு நஷ்டம் எனக் கூறுவது பொய். எனவே, நவம்பர் மாதத்துக்குள் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படாவிட்டால், கூட்டு நடவடிக்கைக் குழுக் கூடி, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும்.

வேலை நிறுத்தம்: சாம் பிட்ரோடோ குழு பரிந்துரையை அமல்படுத்தக் கூடாது என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, டிச. 1 முதல் 3-ம் தேதி வரை வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தீபாவளியன்று தந்தி உள்ளிட்ட வாடிக்கையாளர் சேவை மையங்களுக்கு விடுமுறை அளித்தது வருத்தத்துக்குரியது. வாடிக்கையாளர் சேவை மையம் என்பது ஆண்டில் 365 நாள்களும் இயங்க வேண்டும்.

ஸ்பெக்ட்ரம் ஊழல்:

ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து வெளிக்கொணர்ந்தது தேசிய தொலைத்தொடர்பு ஊழியர்கள் சம்மேளனம்தான். ஆனால், இந்த பிரச்னை குறித்து இதுவரை தீர்வு கிடைக்காதது வருத்தமளிக்கிறது.

உச்ச நீதிமன்றமே கேள்விக் கேட்டும் மத்திய அமைச்சர் ஆ. ராசா மீது பிரதமர் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. குறைந்தபட்சம் அவரைத் தொலைத் தொடர்புத் துறையிலிருந்து வேறு துறைக்காவது மாற்றியிருக்க வேண்டும்' என்றார் மதிவாணன்.அப்போது, சம்மேளனத்தின் மாவட்டச் செயலர் எஸ். பழனியப்பன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

© Copyright 2008 Dinamani